வந்தவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். குடிப்பதற்குத் தண்ணீர் வழங்கி, மக்களின் கண்ணீரைத் துடைக்கின்ற தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, புதுக்கோட்டை நகராட்சி மக்களுக்காக, அந்த நகராட்சி செலுத்த வேண்டிய, அபராத வட்டி 1 1/2 கோடி ரூபாயைக் குடிநீர் வடிகால் வாரியம், தள்ளுபடி செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலனை செய்யும்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று அறுபத்து எட்டு முதல் இருநூற்று எழுபத்து இரண்டு வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. ப. இராஜரெத்தினம்.

***திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வணங்கி, 2003–2005 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினான்காவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.